# மண் மணக்குது

---

**Que.1. 'பாட்டியின் நினைப்பு' என்ற கதையில் பாட்டி கதாப்பாத்திரத்தின் பாத்திரப்படைப்பை ஆய்வுசெய்து சிறு கட்டுரை எழுதுங்கள். (குறிப்பு:- கிராமத்தில் பாட்டியும் சேவலும் – பாட்டியின் அறியாமை – மாணவனின் கருத்து).**

Ans. பாட்டியின் செயல்கள்

தானும் சேவலும் இல்லாவிட்டால் கிராமத்து மக்கள் பாடுபடுவார்கள் என நினைத்துச் சேவலையும் எடுத்துக்கொண்டு செல்லுதல்.

தேடிவந்தவரிடம் பேசும் முறை

மாணவனின் கருத்து

**Que.2. சின்னமலை வெடிகுண்டுக்குத் தப்பியே**

**சீமைப்படையின் குதிரையெல்லாம்**

**ஒன்னின் பின்னொன்னாகக் குள்ளநரிபோல**

**ஓடுமொய்யாரத்தைப் பாருங்கடி?**

**இப்பாடலின் கருத்தினை அடிப்படையாகக்கொண்ட கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.**

**அ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள விலங்குகள் எவை?**

**ஆ) குதிரைப்படை ஓடுவதற்கானக் காரணங்களைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** அ) குதிரை, குள்ளநரி -

ஆ) குதிரைப்படை தீரன் சின்னமலையின் வெடிகுண்டுக்குத் தப்பி ஓடும் காரணங்களை விளக்குதல் –

**Que.3. "பூனைக்குலமென வெள்ளைப் படையோடப்**

**பூரித்து வீரப்புலி போலச்**

**சேனைக் கதிபதி சின்னமலைவரும்**

**தீரத்தை வந்துமே பாருங்கடி"**

**-எனும் கும்மிப்பாடல் வரிகளின் கருத்தின் அடிப்படையில் தீரன் சின்னமலையின் வீரச் செயல்களைப் பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** சின்னமலயின் வீரச்செயல்கள்

எதிரிகளை ஓட்டிய முறை

முறைப்படுத்துதல்

**Que.4. பிழைத்திருத்தி எழுதுங்கள்.**

**கிராமப்புர மக்களின் பன்பாட்டோடும் பளக்க வழக்கத்தோடும் சமூக அமைப்போடும் இணைந்த ஒரு முரைதான் நாட்டுப்புற மருத்துவமுறை. மக்கலின் நம்பிக்கைக்கேற்ப மறுத்துவமுறைகலை மேற்கொன்றனர். நாட்டுப்புற மக்கழ் உனவே மறுந்த மருந்தே உனவு என்ற மறையில் வாழ்க்கையை நடத்தி வந்தனர்.**

**Ans.** கிராமமப்புர மக்கள் - கிராமப்புற மக்கள்

பன்பாட்டோடும் - பண்பாட்டோடும்

பளக்க - பழக்க

இனைந்த - இணைந்த

முரை - முறை

மக்கலின் - மக்களின்

மறுத்துவமுறைகலை – மருத்துவமுறைகளை

மக்கலின் – மக்களின்

**Que.5. "நோய்நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்**

**வாய்நாடி வாய்ப்பச் செயல்"**

**எனும் திருக்குறள் கருத்தினை மையமாகக் கொண்டு 'வருமுன் காத்தல்' என்ற தலைப்பில் விளக்கக்குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** நோய் தோன்றக் காரணங்களை வரிசைப்படுத்துதல் -

தோடர்புடைய பழக்கவழக்கங்கள் பற்றிய விளக்கமம் -

முன்னேற்பாடுகள் -

கருத்துத்தெளிவு –

**Que.6. ஆரோக்கிய தினம் (ஏப்ரல்-1) முன்னிட்டுப் பள்ளி ஆரோக்கிய மன்றம் சார்பான நடைபெறவிருக்கும் கருத்தரங்கிற்குக் கேரள சுகாதாரத்துறை அமைச்சர். கே.ஷைலஜா அவர்கள் கலந்துகொள்ள உள்ளார். தலைமை ஆசிரியர் தலைமை தாங்கும் இவ்விழாவிற்கான சுவரொட்டி தயாரியுங்கள்.**

**Ans.** அமைப்பு

கருத்துத்தெளிவு

**Que.7. ஆரோக்கியமான வாழ்வே நிலையான, நிரந்தரமானது. பள்ளி ஆரோக்கிய மன்ற இதழில் வெளியிட "ஆரோக்கிய வாழ்வே இன்ப வாழ்வு"என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.**

**நோயற்ற வாழ்வே**

**குறைவற்ற செல்வம்**

**நோய் வருமுன் காப்பவன் மனிதன்**

**Ans.** வடிவம்

கருத்து

மேற்கோள், பயன்பாடு

மொழிநடை

**Que.8. கீழே கொடுக்கப்பட்ட பகுதிக்கு எற்ற நிறுத்தற் குறிகளை எழுதுங்கள்.**

**அப்பொழுது அங்கு வந்த ஒருவன் என்ன பாட்டி நீ இங்கேயா இருக்கிறாய் யாரிடமும் சொல்லாமல் வந்துவிட்டாயே உன்னை எங்கே எங்கே என்று எல்லோரும் கேட்கிறார்கள் என்றான்**

**Ans.** மதிப்பீட்டுக் குறிப்பு:

"அப்பொழுது அங்கு வந்த ஒருவன், என்ன பாட்டி! நீ இங்கேயா இருக்கிறாய்?யாரிடமும் சொல்லாமல் வந்துவிட்டாயே? உன்னை எங்கே, எங்கே என்று எல்லோரும் கேட்கிறார்கள் என்றான்."

**Que.9. பந்தாடி னன் அதன் வாயைக் கிழித்தனன்**

**பார்த்தவர் எல்லாம் நடுநடுங்கத்**

**தந்தா னிருப்பு கரங்களி னால்குத்துத்**

**தாங்காமல் வேங்கையும் மாண்டது காண்!**

**- இப்பாடல் வரிகளை நயம் பாராட்டி எழுதுங்கள்.**

**Ans.** சொல்நயம்

பொருள்நயம்

இலக்கண நயம்

மையக்கருத்து

**Que.10. மருதுவின் குத்து தாங்காமல் மாண்டது…………….**

**Ans.** வேங்கை

**Que.11. கதைப்பாடலின் தனித்தன்மைகள் பற்றிக் குறிப்பு எழுதவும்.**

**Ans.** பாட்டாகப் பாடுவது.

தனிச்சம்பவம் ஒன்றைப் பிரதிபலிப்பது.

எடுத்துரைக்கபடுவது.

உள்ளடக்கதாலும் பொருளாலும் நடையாலும் பெயராலும் மக்களுக்குரியது.

கதையின் நிகழ்ச்சிப் போக்கு, உரையாடலாலும் சம்பவங்களாலும் முடிவை நோக்கி விரைவாக நகரும்.

**Que.12. விடுபட்ட இடங்களை நிரப்புங்கள்.**

**நாட்டுப்புற மருத்துவம்**

**Ans.** ஆ) கை மருத்துவம்

ஈ) மூலிகை மருத்துவம்

**Que.13. கீழே கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளுள் உழவுத் தொழிலுடன் தொடர்புடையவைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.**

**அ) "சிறுபிள்ளை வேளாண்மை, விளைஞ்சும் வீடுவந்து சேராது"**

**ஆ) "இரட்டைப் படகில் கால் வைத்தாற் போல...."**

**இ) "ஈ ஏறி மலை குலுங்கியதைப் போல"**

**ஈ) "ஆடிப்பட்டம் தேடி விதை"**

**Ans.** அ) "சிறுபிள்ளை வேளாண்மை, விளைஞ்சும் வீடுவந்து சேராது"

ஈ) "ஆடிப்பட்டம் தேடி விதை"

**Que.14. கொடுக்கப்பட்ட சொற்களை அகரவரிசைப்படுத்திப் பொருள் எழுதுங்கள்.**

**அ) வேங்கை ஆ) சனமானம் இ) ஏர் ஈ) சமுத்திரம்**

**Ans.** ஏர் - கலப்பை

சமுத்திரம் - கடல்

சம்மானம் - பரிசு

வேங்கை – புலி

**Que.15. உங்கள் ஊரிலுள்ள நாட்டுப்புற மருத்துவர் ஒருவரை நேரில் கண்டு, மருத்துவ முறைகளையும் நாட்டுப்புற மருந்துகளையும் அறிந்துகொள்ளும் வகையில் பேட்டி காண்பதற்கான வினாநிரல் (ஆறு வினாக்கள்) தயாரியுங்கள்.**

**Ans.** பொருந்தமான ஆறுவினாக்கள்

**Que.16. உங்களுக்குத் தெரிந்த ஏதேனும் ஒரு நாட்டுப்புற மருந்து பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** ஏதேனும் ஒரு மருந்து

பயன்பாடு

சிறப்புத்தன்மைகள்

**Que.17. உலக ஆரோக்கிய தினமான ஏப்ரல் 7 அன்று பள்ளி தமிழ்மன்றம் சார்பில் "நாட்டுப்புற மருந்துகளும் உடல் ஆரோக்கியமும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் தலைமை ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக பாரம்பரிய மருந்துவர் இராஜமாணிக்கம் அவர்கள் கலந்துகொண்டார். பள்ளி மாணவர்த் தலைவர் வரவேற்புரை வழங்கினார். தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் நன்றி கூறினார்.**

**இந்நிகழ்ச்சிக்கான பத்திரிக்கைச் செய்தி எழுதுங்கள்.**

**Ans.** அமைப்பு

சிறப்பு விருந்தினர் அறிமுகம்

வரிசைப்படுத்துதல்

மொழிநடை

**Que.18. இன்றைய அறிவியல் உலகில் மனிதன் இயந்திரமாகிவிட்டான். நாளுக்கு நாள் நோய்களின் எண்ணிக்கைக் கூடிக்கொண்டு வருகிறது. இந்நிலையில் மருத்துவத் துறையின் வளர்ச்சி பற்றியும் மருந்தாகப் பயன்படும் உணவுகள் பற்றியும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் வகையில் துண்டுப்பிரசுரம் எழுதுங்கள்.**

**Ans.** கருத்துத் தெளிவு, செறிவு

வடிவம்

**Que.19. இன்றைய அறிவியல் உலகில் மனிதன் இயந்திரம் ஆகிவிட்டான். நாளுக்கு நாள் நோய்களின் எண்ணிக்கைக் கூடிக்கொண்டே வருகிறது. இந்நிலை பற்றி மக்களிடையே விழிப்புணர்வூட்டும் வகையில் "இயற்கை உணவும் இனிய வாழ்வும்" என்ற தலைப்பில் பத்திரிக்கைத் தலையங்கம் தயாரியுங்கள்.**

**Ans.** வடிவம்

பெருகிவரும் நோய்கள் பற்றிய விளக்கம்

இயற்கை உணவின் முக்கியத்துவம்

சொந்தக்கருத்து

**Que.20. பள்ளி ஆரோக்கிய மன்றம் சார்பில் இன்றைய வாழ்க்கைச் சூழலுக்குப் பொருத்தமானது நாட்டுப்புற மருத்துவமா? ஆங்கில மருத்துவமா? என்ற தலைப்பில் நடைபெறும் பட்டிமன்றத்தில் நீங்கள் சார்ந்துள்ள அணிக்கு வலு சேர்ப்பதற்கான பட்டிமன்றக் குறிப்பு தயாரியுங்கள்.**

**Ans.** தேர்ந்தெடுத்த தலைப்பிற்குப் பொருத்தமான கருத்துக்கள்

சொற்தெளிவு

முறைப்படுத்துதல்

மொழிநடை

**Que.21. "கடுகு சிறுத்தாலும் காரம் போகாது"**

**என்னும் பழமொழியை விளக்கி குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** கருத்து

விளக்கச்செய்தி

**Que.22. நாட்டுப்புற மக்கள் உணவே மருந்து என நோயின்றி நீண்டகாலம் வாழ்ந்தனர். நமது சுற்றுப்புற மூலிகைகளைப் பாதுகாக்கும் வண்ணம். மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையிலும் துண்டுப் பிரசுரம் தயாரியுங்கள்.**

**Ans.** அமைப்பு

மூலிகைகளின் பயன்கள்

பாதுகாக்கும் முறைகள்

வரிசைப்படுத்துதல்

**Que.23. தாய் தந்தை பேண்', 'கோபம் கீழ்மை தரும்', 'எளிமை ஏற்றம் தரும்' என்பன போன்ற பழமொழிகளைக் கொண்டு மனிதன் எவ்வாறு செயல்படவேண்டும் என்பதை விளக்கும் வி.ஜி.சந்தோசம் எழுதிய 13 கட்டுரைகளின் தொகுப்பைக் கொண்ட "எளிமையின் இனிமை" என்னும் நூல் சந்தனம்மாள் பதிப்பகம், சைதாப்பேட்டை, சென்னை -15-இல்**

**அச்சிடப்பட்டு இந்த ஆண்டு விலை ரூ.110-க்கு விற்பனையாகிறது. இந்நூலிற்கான விளம்பரம் தயாரியுங்கள்.**

**Ans.** அமைப்பு

உள்ளடக்கம் – செய்தி எளிமை – தெளிவு.

**Que.24. சளித்தொல்லையால் அடிக்கடி அவதிப்படும் உன் நண்பனைக் குணப்படுத்த சுக்குமல்லி காப்பி என்னும் அருமருந்தினை விளக்கி கடிதம் எழுதுங்கள்.**

**Ans.** அமைப்பு

சுக்குமல்லிக்காப்பி உருவாக்கும் முறை

பயன்கள்

மொழிநடை

**Que.25. நோய் வராமல் காக்க உணவுப் பழக்கங்களை நாட்டுப்புற மக்கள் யையாண்டனர் என்னும் கருத்தினை மையமாகக் கொண்டு "வருமுன் காத்தல்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.**

**Ans.** வடிவம்

நோய்வராமல் காக்க – உணவுப்பழக்கங்கள்

நாட்டு மருத்துவ முறைகள்

மேற்கோள்கள் பயன்பாடு

மொழிநடை

**Que.26. அ) பொண்ணாங்கண்ணிக்கீரை - (i) புண் ஆறும்.**

**ஆ) துளசி இலை - (ii) வயித்து வலி அடங்கும்.**

**இ) அரிவாள்மனைப் பூண்டு - (iii) பசியைத்தூண்டும்.**

**ஈ) ஆடாதோடா இலைச்சாறு - (iv) காய்ச்சலைக் குணமாக்கும்.**

**(v) சளித்தொல்லை அகற்றும்.**

**Ans.** அ) பொண்ணாங்கண்ணிக்கீரை - (iii) பசியைத்தூண்டும்.

ஆ) துளசி இலை -(iv) காய்ச்சலைக் குணமாக்கும்.

இ) அரிவாள்மனைப் பூண்டு - (i) புண் ஆறும்.

ஈ) ஆடாதோடா இலைச்சாறு - (v) சளித்தொல்லை அகற்றும்.

**Que.27. "பொன்னாங் கண்ணிக்கு**

**புளி ஊற்றிச் சமைத்தால்**

**உண்ணாப் பெண்ணும்**

**ஓர் உழக்கு உண்பாள்”**

**- என்னும் பழிமொழியை விளக்கி குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** பொன்னாங் கண்ணிக் கீரையில் புளி சிறிது சேர்த்துச் சமைத்துக் கொடுத்தால் பசியில்லை என்று சொல்லக்கூடிய பெண்ணும் நன்கு சாப்பிடுவாள்.

பசியைத் தூண்டும் சக்தி பொன்னாங்கண்ணிக் கீரைக்கு உண்டு.

பசித்தபின் சாப்பிடுவது உடல்நலத்திற்குச் சிறந்தது.

**Que.28. உடலில் நோய்வராமல் தடுக்கச் சில உணவு முறைகளையும் சில நோய்களைக் குணப்படுத்த எளிய மூலிகைகளையும் மேற்கொண்ட மருத்துவம் என கிராமப்புற மக்களின் வாழ்க்கையோடு பின்னிக்காணப்பட்ட “நாட்டுப்புற மருத்துவம்” பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** நாட்டுப்புற மருத்துவத்தின் வேறு பெயர்கள் – நாட்டு வைத்தியம், கைமருத்துவம், விட்டு மருத்துவம், கைமருந்து வைத்தியம், பாட்டி வைத்தியம்.

மருந்தாக உட்கொண்ட உணவு பற்றி விளக்கம்.

நோய்கள் – மூலிகைகள் விளக்கம்.

**Que.29. கிராமப்புற மக்களின் பண்பாட்டோடும், பழக்க வழக்கங்களோடும், சமூக அமைப்போடும் இணைந்த நாட்டுப்புற மருத்துவம் மக்களின் நம்பிக்கைக் கேற்பவும் அமைந்தன என்னும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு “உணவே மருந்து, மருந்தே உணவு” என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.**

**Ans.** வடிவம்

கருத்துத் தெளிவு

சான்றுகள் – பயன்பாடு

மொழிநடை

**Que.30. ஒளிபடைத் தவிழி யுடையார்! நெஞ்சில்**

**உறுதி கொண்ட துணிவுடையார்**

**களிமி குந்தஇன் சொல்லுடையார்! உடல**

**கட்டுடையார்! சாந்து பொட்டுடையார்**

**விள்ளுமிப் பிள்ளையே மூத்தமகன் பெயர்**

**வெள்ளை மருதெனப் பேர்படைத்தான்**

**தெள்ளிய னாம் இவனுக்கு இளையோனவன்**

**சின்ன மருதெனப் பேரெடுத்தான்.**

**- இப்பாடலை நயம்பாராட்டி எழுதுங்கள்.**

**Ans.** சொல்நயம் 1

கருத்து/பொருள்நயம் 2

இலக்கண வகைகள் இனங்காணுதல் 1

மையக்கருத்து 1

**Que.31. கேரள மன்னன் மருதுவை “வீரசிகாமணி” என வாழ்த்துவதற்கான காரணங்களை விளக்கிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** வேங்கை மனிதர்களைக் கொன்று தின்பதைக் கேட்ட மன்னன் புலியைக் கொல்பவர்களுக்குச் சம்மானம் அளிப்பதாகத் தெரிவித்தல்.

பலவீரர்கள் வேங்கைக்கு இரையாதல்

மருது தன் தம்பியுடன் சென்று வேங்கையைக் கொல்லுதல்.

பாராட்டுப்பெறுதல்.

**Que.32. வெள்ளையர் தன் நாட்டில் இருப்பதை மறுத்து, ஆங்கில பெரும்படைகள் அஞ்சியலறி புறங்காட்டி ஓடும்படித் துரத்தி, இளைஞர்களுக்கு எழுச்சி ஊட்டும் வரலாறை விளக்கும் தீரன் சின்னமலைக் கும்மிப்பாடலின் கருத்தினை விளக்கி எழுதுங்கள்.**

**Ans.** கருத்து.

போருக்குச் சென்றமுறை, வீரச்செயல்கள் எதிரிப்படைகள் வெடிகுண்டுக்குத் தப்பி குள்ளநரி போல் புறங்காட்டி ஓடிய செயல் விளக்குதல்.

**Que.33. சீரரெ னப்பலர் வந்துவந்து மந்த**

**வேங்கைக்கு இரையாகி விட்டனராம்!**

**தீர மருததன் தம்பியுடன் அங்கே**

**சென்றந்த வேங்கை தனைப்பிடித்து**

**பந்தாடி னன் அதன் வாயைக் கிழித்தனன்**

**பார்த்தவர் எல்லாம் நடுநடுங்கத்**

**தந்தா விருப்புக் கரண்களி னால்குத்தத்**

**தாங்காமல் வேங்கையும் மாண்டது காண்!**

**இப்பாடலை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.**

**அ) இப்பாடலிலுள்ள வேங்கை என்பதன் பொருள்?**

**ஆ) இப்பாடலில் இடம்பெற்றுள்ள ஏதேனும் ஒரு அடுக்குத் தொடரை**

**எழுதுங்கள்?**

**இ) மருது சகோதரர்களின் வீரச்செயல்களைப் பற்றி விளக்கக் குறிப்பு எழுதுங்கள்?**

**Ans.** அ) புலி

ஆ) வந்து வந்து

இ) அநேக வீரர்களை இரையாக்கிய வேங்கையினை மருது தன் தம்பியுடன் சேர்ந்து பிடித்து கிழித்துப பந்தாடிய வீரச்செயல்களை விளக்குதல்

**Que.34. "வெள்ளித்தேர் பூட்டி**

**மேகம்போல் மாடுகட்டி**

**அள்ளிப்படி யளக்கும்**

**அதிட்ட முள்ளோர் புத்திரனோ!"**

**இப்பாடலில் இடம்பெற்றுள்ள உவமைத் தொடரைத் தேர்ந்தெழுதுங்கள்.**

**Ans.** மேகம் போல்

**Que.35. கொடுக்கப்பட்ட கவிதையினை வாசித்து, கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.**

**"அடித்து பொலிதூற்ற**

**அதுவும் கலம்காணும்**

**பொன்சுளக்கு கொண்டு**

**பொதிதூற்றி நிற்பாராம்.**

**பொன்மரக்கால் கொண்டு**

**பொதியளந்து நிற்பாராம்."**

**அ) இக்கவிதையில் குறிப்பிடப்படும் அளவை எது?**

**ஆ)பொலியினைத் தூற்றப் பயன்படுவது யாது?**

**இ) அன்றைய நெற்பொலி தூற்றுதலை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு விளக்கம் எழுதுங்கள்?**

**Ans. அ) மரக்கால்**

**ஆ) சுளக்கு**

**இ) பொலி தூற்றுதல் – அன்றைய இன்றைய முறைகளின் ஒற்றுமை வேற்றுமைகள்.**

**Que.36. "எருவினும் நன்று ஏர் உழுதல்"**

**- பழமொழி.**

**"வெள்ளிக் கலப்பை கொண்டு**

**விடிகாலம் ஏர்பூட்டி**

**தங்கக் கலப்பை கொண்டு**

**தரிசுழுகப் போனாராம்"**

**மு.வை.அரவிந்தன்.**

**கொடுக்கப்பட்ட பழமொழியை மு.வை. அரவிந்தன் பாடலின் கருத்துடன் ஒப்பிட்டுக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** கருத்து.

காரண காரியங்களை அலசி ஆராய்ந்த ஒப்பீட செய்து எழுதுதல்.

ஒற்றுமை வேற்றுமைகள்.

மொழிநடை.

**Que.37. உழவுத்தொழில் தொடர்பான ஏதேனும் இரு பழமொழிகள் எழுதுங்கள்.**

**Ans.** ஆடிப்பட்டம் தேடி விதை

எருவினும் நன்று ஏர் உழுதல்

**Que.38. எரிகிற தீயை எண்ணெய் விட்டு அணைக்க நினைத்தாற் போல"**

**என்னும் பழமொழியை விளக்கி குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** மனதளவில் பிரச்சினையைச் சந்தித்துள்ள ஒருவரிடம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைத் தவிர்த்து, மேலும், பிரச்சினையை அதிகரிக்கத் தூண்டி விடுதல்.

**Que.39. "ஆலைக்குள் அகப்பட்ட சோலைக் கரும்பு போல"**

**“ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்”**

**இவற்றுள் ஏதேனும் ஒரு பழமொழிக்கான விளக்கம் எழுதி, பொருத்தமான ஒரு நிகழ்ச்சியும் எழுதுங்கள்.**

**Ans.** பழமொழி விளக்கம்

பொருத்தமான நிகழ்ச்சி

**Que.40. பண்டையக் காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் கூறிய தமிழ் மருத்துவம்…………**

**Ans.** சித்த மருத்துவம்

**Que.41. ஆய்வு நோக்கில், நாட்டுப்புற மருத்துவம் என்ற நூலை எழுதியவர்…………**

**Ans.** க.வெங்கடேசன்

**Que.42. கோழி கூவிப் பொழுது விடிவதில்லை”**

**என்னும் பழிமொழிக்கேற்ப ‘பாட்டியின் நினைப்பு’ கதை அமைந்துள்ளதா? உங்கள் கருத்துக்களைக் குறிப்பாக எழுதுங்கள்.**

**Ans.** ஆம்/இல்லை

காரண காரியங்களுடன் கருத்தினை விளக்குதல்

வரிசைப்படுத்துதல்

**Que.43. கீழ் கொடுக்கப்பட்டுள்ள தொடர்களுன் அடுக்குத் தொடர்களைத் தேர்ந்தெடுத்து விளக்கம் எழுதுங்கள்.**

**பாட்டி சிரிசிரி எனச் சிரித்தாள்.**

**மலர்கள் கொத்துக்கொத்தாகப் பூத்துக் குலுங்கின.**

**பறவைகள் படபடவென சிறகடித்துப் பறந்தன.**

**ஆற்றுவெள்ளம் சலசல எனப் பாய்ந்தது.**

**Ans.** சிரிசிரி, கொத்துக்கொத்து

அடுக்குத்தொடர் விளக்கம்

**Que.44. முத்தாளர் முல்லை முத்தையா அவர்கள் எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல் அல்லாதது.**

**அ) பெர்னாட்ஷா வாழ்வும் பணியும்**

**ஆ) வேடிக்கை மனிதர் புதுமைப்பித்தன்**

**இ) உலக சொதி புத்தர்**

**ஈ) அக்னிச் சிறகுகள்**

**Ans.** ஈ) அக்னிச் சிறகுகள்

**Que.45. “உடம்பெல்லாம் நோகுதம்மா! கண்ணே**

**உனக்கு ஒத்தடம் கொடுக்கட்டுமா?**

**ஏலமும் இஞ்சிச்சாறும் கண்ணே உனக்கு**

**எட்டுசொட்டு கொடுக்கட்டுமா?”**

**இப்பாடல் உணர்த்தும் கருத்துக்களின் அடிப்படையில் “இயற்கை மருத்துவம்” பற்றிக் குறிப்பு எழுதுங்கள்.**

**Ans.** இயற்கை மருத்துவ முக்கியத்துவம் 1

பயன்பாடு 2

**Que.46. இராமகாவியத்துக்கு மாறாக இராவணகாவியம் பாடியவர்.**

**அ) எஸ். லீலாவதி ஆ) புலவர்.குழந்தை**

**இ) மு.வை. அரவிந்தன் ஈ) கா.இராதா**

**Ans.** ஆ) புலவர்.குழந்தை